# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2018 சனவரி

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

---

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

இவ்வினாவின் இல. 1.1 தொடக்கம் 1.7 வரையான 7 உப பகுதிகளின் ஊடாக கணக்கீடு தொடர்பான கோட்பாட்டு ரீதியான அறிவும் சொத்தொன்றின் முன்கொணரற் பெறுமதி, வியாபார வருமதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கு, பெறுமதிசேர் வரி கட்டுப்பாட்டுக் கணக்குகள், மொத்த இலாப விகிதங்கள், இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கான கணக்கீடு, பங்குடமை ஒழுங்குவிதி ஏற்பாடுகள் மற்றும் தொக்கு மதிப்பு போன்றவற்றை கணிப்பீடு செய்யும் அறிவும் பரீட்சிக்கப்பட்டது. சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர். இதன்போது அவதானிக்கப்பட்ட பலவீனங்கள் பின்வருமாறு.

**1.1** சில பரீட்சார்த்திகளிடம் சொத்தொன்றின் முன்கொணரற் பெறுமதி தொடர்பில் விளக்கமின்மை காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதன் காரணமாக அவர்களால் இவ்வினா வுக்கான சரியான விடையை வழங்க முடியவில்லை.

**1.3** சில பரீட்சார்த்திகளிடம் விற்பனைக் கிரயம், மொத்த இலாபம் மற்றும் விற்பனை ஆகிய வற்றுக்கிடையிலான தொடர்புடைமையை விளங்கிக்கொள்ள முடியவில்லை.

**1.5** அதிகளவான பரீட்சார்த்திகள், சேகரிக்கப்பட்ட பெறுமதிசேர் வரி மற்றும் செலுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி ஆகியவற்றைப் பயன்படுத்தி பெறுமதிசேர் வரி கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியைக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர்.

**1.6** 1890 ஆம் ஆண்டின் பங்குடமை ஒழுங்குவிதிகளின் பிரிவு 24 இன் ஏற்பாடுகளை அதிகளவான பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ளவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகளால் இலாபப் பங்கிடல் விகிதமாக மூலதன விகிதம் பயன்படுத்தப்பட்டிருந்த மையும் பங்காளர்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மீதான வட்டி வீதமாக 5 % இனை விட வேறுபட்ட வீதங்கள் வழங்கப்பட்டிருந்தமையும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

**1.7** இந்தப் பகுதிக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்ததுடன் சிலர் எண்கணித வழிமுறையூடாக (arithmetical way) விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் பெறுவனவுகள் மற்றும் வழங்கல்களின் அட்டவணையைப் பயன்படுத்தி சரியாக விடையளித் திருந்தனர். எவ்வாறாயினும், வேறு சில பரீட்சார்த்திகள் கணிப்பானைப் பயன்படுத்தி கணிப்பீட்டைச் செய்திருந்ததுடன் அவர்கள் விடையினை மாத்திரமே குறிப்பிட்டிருந்தனர். இவ்வகையான கணிப்பீடுகளில் சம்பந்தப்பட்ட படிமுறைகளைக் காட்டுவது மிகவும் முக்கியமா னதாகும். பரீட்சார்த்திகள் பாடத்திட்டத்தையும் சுய கற்றல் புத்தகத்தினையும் கற்பதன் மூலம் தமது அறிவினை மேம்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

## பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

இவ்வினா வங்கிக் கூற்று மற்றும் காசேட்டிற்கிடையில் காணப்படும் வேறுபாட்டிற்கான திருத்தத்தை காசேட்டில் மேற்கொள்வதற்கான ஆற்றலையும் மீதமுள்ள வேறுபாடுகளை இணக்கம் செய்வதற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினை தயாரிப்பதற்கான ஆற்றலையும் பரீட்சிப்பதற்காக அமைக்கப் பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளிடம் காசேட்டைச் செம்மையாக்கம் செய்வதற்கான சரியான புரிந்துணர்வு காணப்படாததால் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட வேண்டிய விடயங்களை செம்மையாக்கப்பட்ட காசேட்டிலும் செம்மையாக்கப்பட்ட காசேட்டில் குறிப்பிடப்பட வேண்டிய விடயங்களை வங்கிக் கணக்கிணக்கக் கூற்றிலும் குறிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் செம்மையாக்கப்பட்ட காசேட்டின்படியான சரியான மீதியினை வங்கிக் கணக்கிணக்கக் கூற்றிற்கு எடுத்திருக்கவில்லை.

### வினா 03

இவ்வினா சம்பளத்திற்கான கணக்கீடு, படிகள் மற்றும் சம்பளத்திலிருந்தான கழிப்பனவுகள் அதேபோன்று அத்தகைய கழிப்பனவுகளை மூன்றாம் தரப்பினருக்குக் கொடுப்பனவு செய்தல் ஆகியவை மீதான அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் அவர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் சரியான விடையினை அளிக்கத் தவறியிருந்தனர். எனவே, அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்காக குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

தரப்பட்ட தகவல்களை பதிவுசெய்வதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தயாரிக்குமாறு தேவைப்படுத் தப்பட்டபோதிலும், சில பரீட்சார்த்திகள் பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் தேவையான சகல நாட்குறிப்புப் பதிவுகளையும் தயாரிக்காததுடன், தயாரிக்கப்பட்ட நாட்குறிப்புப் பதிவுகளில்கூட குறிப்புகள் தரப்படவில்லை. மேலும், காசு ஊடுசெயல்கள் உள்ளிட்ட நாட்குறிப்புப் பதிவுகளைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டபோதிலும், அதிகளவான பரீட்சார்த் திகள் காசு ஊடுசெயல்களை எழுதியிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகளால் தயாரிக்கப்பட்ட நாட்குறிப்புப் பதிவுகளின்படி, தொழில்தருநரின் 12 % பங்களிப்பானது பிழையாக, ஊழியரின் சம்பளத் திலிருந்தான ஒரு கழிப்பனவாகக் குறிப்பிடப்பட்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

நாட்குறிப்புப் பதிவுகளைத் தயாரிக்கும்போது, அதிகளவான பரீட்சார்த்திகள் குறிப்புகளைச் சரியாக எழுதியிருக்கவில்லை. EPF உம் ETF உம் அடிப்படைச் சம்பளத்தினடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட வேண்டும் என்றபோதிலும், சில பரீட்சார்த்திகள் அதனை மொத்தச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் சரியாகக் கணிப்பிட்டிருந்தபோதிலும் அவர்கள் நாட்குறிப்புப் பதிவுகளை சரியாகத் தயாரிப்பதற்குத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்குடன் தொடர்புடைய நாட்குறிப்புப் பதிவுகள் பற்றிய விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. சம்பளத்திலிருந்தான கழிப்பனவுகளை சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவுசெய்வதற்கான அடிப்படை அறிவு மேம்படுத்தப்பட வேண்டும். வினாவைச் சரியாக விளங்கிக் கொண்டு விடையளிப்பது மிகவும் முக்கியமானதாகும்.

## வினா 04

இவ்வினா கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகளைத் தயாரிப்பதன் மீதான அறிவைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றி கரமாக விடையளித்திருந்ததுடன் பலர் முழுப் புள்ளிகளையும் ஈட்டியிருந்தனர். எவ்வாறாயினும், மிகச் சிலர் சரியாக விடையளிக்கத் தவறியிருந்ததுடன், ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் வரவுப் பதிவா அல்லது செலவுப் பதிவா என்பது பற்றிய விளக்கமின்மை காரணமாக, கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியினை வரவு மீதியாகவும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியினை செலவு மீதியாகவும் காட்டியிருந்தனர். மேலும், கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவுசெய்யப்பட வேண்டிய பதிவுகள் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன், கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவுசெய்யப்பட வேண்டிய பதிவுகள் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் பதிவுசெய்யப்பட்டிருந்தன. இரட்டைப் பதிவு கோட்பாடு மீதான புரிந்துணர்வு மேம்படுத்தப்பட வேண்டும்.

## வினா 05

இவ்வினா பங்காளர் ஒருவரின் ஓய்வின்போது நன்மதிப்புப் பெறுமதியை எவ்வாறு கணக்கீடு செய்வது என்பது பற்றியும் அத்தகைய நிலைமைகளில் பங்காளர்களுக்கிடையில் மீள்பெறுமதியிட்ட சொத்துக்கள் மீதான மீள்மதிப்பீட்டு இலாபப் பகிர்வினை எவ்வாறு கணக்கிற்கொள்வது என்பது பற்றியும் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. இவ்வினாவுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்தபோதிலும், அவர்கள் சொத்துக்களின் மீள்மதிப்பீட்டினையும் பங்காளரிடையேயான மீள்மதிப்பீட்டு இலாபத்தினையும் சரியாகக் கணக்கிற் கொள்ளத் தவறியிருந்தனர். நன்மதிப்பைக் கணக்கீடு செய்யும்போது, கணக்கேடுகளில் நன்மதிப்பு கணக்கு பேணப்படுவதில்லை என்பது பற்றிய சரியான புரிந்துணர்வு காணப்படாமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் கணக்கேடுகளில் நன்மதிப்பைப் பதிவுசெய்திருந்தனர் ஆயினும் அதனை அகற்றுவதற்கான எந்தப் பதிவும் செய்யப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் நாட்குறிப்புப் பதிவுகள் தொடர்பில் கொண்டிருந்த குறைந்த அறிவு காரணமாக பேரேட்டுக் கணக்குகளைக் காட்டுவதற்கு முயற்சித்திருந்தனர்.

## வினா 06

இந்த வினா நிலையான சொத்துக்களின் விற்பனை மற்றும் அந்தச் சொத்துக்களை கணக்கேடு களிலிருந்து அகற்றல் போன்றவற்றின் மீதான அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். அவர்களில் பெரும்பாலான வர்கள் பகுதி (a) இற்குச் சரியாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்ததுடன் சில பரீட்சார்த்திகள், முன்னைய ஆண்டுகளுக்கான தேய்மானத்தைக் கணிப்பிடுவதில் வழுக்கள் ஏற்பட்டதன் காரணமாக மோட்டார் வாகனத்தின் விற்பனை மூலமான இலாபத்தினைச் சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட விநியோக வான் இற்கான சரியான தேய்மானத்தைக் கணிப்பிடத் தவறியதன் காரணமாக பகுதி (b) இற்கான புள்ளிகளை இழந்திருந்தனர். இது விநியோக வானின் கொள்வனவுத் திகதி மற்றும் கணக்கீட்டு ஆண்டின் இறுதித் திகதி ஆகியவற்றை கருத்திற்கொள்ளாது, முழு ஆண்டிற்காகவும் தேய்மானம் செய்ததன் காரணமாக ஏற்பட்டதாகும். மேலும், சில பரீட்சார்த்திகள் விற்பனையுடன் தொடர்புபட்ட 2016 ஏப்ரல், மே, யூன் மாதங்கள் தொடர்பில் தேய்மானத்தைச் சரியாகக் கணிப்பிட்டு அதனை விற்பனைக் கணக்கில் பதிவுசெய்திருந்தனர் ஆயினும், நடப்பு ஆண்டுடன் தொடர்புடைய சில தொகைகள் தேய்மானக் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

இவ்வினா இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கான கணக்கீடுகள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன், குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகளால் இதற்குரிய முழுப் புள்ளிகளையும் பெற முடிந்திருந்தது.

முழுப் புள்ளிகளையும் பெறத்தவறிய பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்ட வழுக்களும் பலவீனங்களும் பின்வருமாறு :

(1) பகுதி (a) இல் போசனசாலையின் வியாபாரக் கணக்கினைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் வியாபாரக் கணக்கிற்குப் பதிலாக அங்கத்தவர் சந்தாக் கணக்கினைத் தயாரித்திருந்தனர்.

(2) அதிகளவான பரீட்சார்த்திகள், விளையாட்டுக் கழகம் இலாப நோக்கற்ற நிறுவனமாக இருந்த போதிலும் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் போசனசாலை ஒரு இலாபம் உழைக்கும் வியாபாரம் என்பதை விளங்கிக்கொள்ளவில்லை. எனவே, போசனசாலையின் கொள்வனவுகள், விற்பனைகள், ஆரம்ப மற்றும் இறுதித் தொக்குகள் ஆகியவற்றை வருமான, செலவுக் கணக்கில் உள்ளடக்கியிருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகளின் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகள் மீதான கோட்பாட்டு ரீதியான அறிவு மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. எனவே, அவர்கள் போசனசாலையின் கொள்வனவுகளைச் சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். கொள்வனவுகளின் பெறுமதியைத் துணிவதற்காக கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கைத் தயாரிக்கும்போது, சில பரீட்சார்த்திகள் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளை கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிழையான பக்கங்களில் குறிப்பிட்டிருந்தனர். கடன்கொடுத்தோர் கணக்கு பொதுவாக செலவு மீதியினைக் கொண்டிருக்கும் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது. மேலும், சில பரீட்சார்த்திகள் வழங்குநர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூ. 7,200/- இனை கொள்வனவுகளாகக் குறிப்பிட்டிருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் வியாபாரக் கணக்கினைச் சரியாகத் தயாரித்திருந்ததுடன் சரியான இலாபத்தினையும் கணிப்பிட்டிருந்தனர். ஆனால், அந்த இலாபம் வருமான, செலவினக் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

(5) சில பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட ஆண்டிற்கான சந்தா, காகிதாதிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களின் தேய்மானம் ஆகியவற்றைச் சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர்.

## வினா 08

தனியுரிமையாளர் வியாபாரம் ஒன்றின் நிதித் தரவுகளைப் பயன்படுத்தி பரீட்சை மீதியைத் தயாரிப்பதற்கு இங்கு தேவைப்படுத்தப்பட்டது. மொத்தத்தில் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்த பரீட்சார்த்திகள் எண்ணிக்கை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. சில பரீட்சார்த்திகள் இவ்வினாவின் சகல பகுதிகளுக்கும் விடையளிக்க முயலவில்லை. இங்கு கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கைப் பயன்படுத்தி கொள்வனவுகளைத் துணியுமாறும் விற்பனைக் கணியத்தைக் கணிப்பிடுமாறும் சரியான வங்கி மற்றும் காசு மீதிகளை துணியுமாறும் ஆரம்ப மீதிகளைப் பயன்படுத்தி மூலதனத்தைத் துணியுமாறும் கேட்கப்பட்டது.

இரட்டைப் பதிவுக் கோட்பாடு தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த இவ்வினாவுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக முகங்கொடுத்திருக்கவில்லை. பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(1) பல பரீட்சார்த்திகள் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களைப் பயன்படுத்தி மூலதனத்தைச் சரியாகக் கணிப்பிடத் தவறியிருந்தனர்.

(2) அலுவலக உபகரணத்தின் ஆரம்ப மீதியும் இறுதி மீதியும் தரப்படும்போது, ஆண்டின் காலப் பகுதியில் சேர்ப்பனவுகளோ அல்லது விற்பனைகளோ இருக்காது, ஆரம்ப மீதிக்கும் இறுதி மீதிக்குமிடையேயான வித்தியாசம் அந்த ஆண்டிற்கான தேய்மானமாக ஏற்பிசைவு செய்யப்படக் கூடியதாகும். ஆனால், அதிகளவான பரீட்சார்த்திகள் தேய்மானப் பெறுமதியை ஏற்பிசைவு செய்திருக்கவில்லை.

(3) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் தரவுகளைப் பயன்படுத்தி கொள்வனவுகளைத் துணிவதற்கான அறிவு குறைவாக இருந்ததன் காரணமாக கொள்வனவுகளின் பெறுமதி சரியாக கணிப்பிடப்பட முடியவில்லை.

(4) ஆண்டின் காலப்பகுதியில் செய்யப்பட்ட ரூ. 13,000/- கொடுப்பனவானது அட்டுறு மின்சாரச் செலவுகளைக் கருத்திற்கொள்ளாது ஆண்டிற்கான மின்சாரச் செலவாக ஏற்பிசைவு செய்யப் பட்டிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

(5) சில பரீட்சார்த்திகள் பரீட்சை மீதியிலுள்ள ஒவ்வொரு உருப்படிக்குமான செய்முறைகளைக் காட்டியிருக்கவில்லை. எனவே, செய்முறைகள் தரப்படாததால் பரீட்சை மீதியில் குறிப்பிடப் பட்ட பெறுமானங்கள் பிழையாக இருந்திருப்பின் புள்ளிகள் இழக்கப்பட்டிருக்கும். எனவே, செய்முறைகளைக் காட்டுவது உயர் புள்ளிகளைப் பெறுவதற்கு முக்கியமானதாகும்.

(6) சில பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்றினைத் தயாரித்திருந்தனர். பரீட்சை மீதியைத் தயாரித்த சில பரீட்சார்த்திகள் சில மீதிகளை பிழையான பக்கத்தில் எழுதியிருந்தனர். காசு மற்றும் வங்கிப் பேரேட்டுக் கணக்குகளிலிருந்து இறுதி மீதிகளை பிரித்தெடுக்காத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

## வினா 09

இவ்வினா பங்குடமை ஒன்றின் சம்பளங்கள், வியாபார இலாபத்தின் பகிர்வு, மூலதனம் மீதான வட்டி ஆகியவற்றுக்கான கணக்கீடு மீதான அறிவைப் பரீட்சித்தது. இவ்வினாவுக்கான முழுப் புள்ளி களையும் பெற்றிருந்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தது.

வழங்கப்பட்ட விடைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன:

(1) சில பரீட்சார்த்திகள் **மனு**வுக்கு உரித்துடைய வருடாந்தச் சம்பளத்திற்குப் பதிலாக அவரின் மாதாந்தச் சம்பளத்தை மாத்திரம் கருத்திற்கொண்டிருந்தனர். வேறு சிலர் சகல பங்காளர் களுக்குமான சம்பளங்களைக் கணக்கிலெடுத்திருந்தனர்.

(2) 2016 ஏப்ரல் 1 இல், **மனு**வின் நடைமுறைக் கணக்கில் செலவு மீதியொன்றும் அனுவின் நடைமுறைக் கணக்கில் வரவு மீதியொன்றும் இருந்தபோதிலும் இரண்டு மீதிகளும் செலவு மீதிகளாக எடுக்கப்பட்டிருந்தன.

(3) அதிகளவான பரீட்சார்த்திகள் இலாபப் பங்கினை சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். இங்கு தவறான இலாபப் பங்கு விகிதங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

## பகுதி D

ஒரு கட்டாய வினா

(25 புள்ளிகள்)

### வினா 10

இவ்வினா கம்பனி ஒன்றினது முகாமையின் பாவனைக்காக இலாப, நட்ட மற்றும் முற்றடக்க வருமானக் கூற்று, நிதி நிலைக் கூற்று ஆகியவற்றைத் தயாரிக்குமாறு தேவைப்படுத்தியிருந்தது. இதன் ஊடாக, இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (LKAS) கீழ் தரப்பட்ட வடிவத்திற்கு இணங்க கணக்குகளைத் தயாரித்தல், வருமான வரிக் கணிப்பீடு, கிரயத்தை விட நிகர தேறத்தக்க பெறுமதி குறைவாக இருக்கும்போது தொக்குகளுக்கான கணக்கீடு, அறவிட முடியாத மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு ஆகியவற்றின் மீதான ஆற்றலைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் உயர் புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது.

பின்வரும் பொதுவான பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன :

(1) அதிகளவான பரீட்சார்த்திகள் வருமான வரியினைச் சரியாகச் செம்மையாக்கம் செய்யத் தவறியிருந்தனர். இதில், முன்னைய ஆண்டு தொடர்பில் ஏற்பாடுகளுக்கு மேலான வருமான வரிக்கான கணக்கீடு சரியாகச் செய்யப்படவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள் சொத்துக்கள் மீதான தேய்மானத்தைச் சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறி யிருந்தனர். இதன் காரணமாக ஆண்டிற்கான தேய்மானத் தொகையைச் சரியாக அடையாளம் காண்பதற்குத் தவறியிருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் வருமானக் கூற்றுக்கான சரியான வடிவத்தினைப் பின்பற்றியிருக்கவில்லை.

(4) சில பரீட்சார்த்திகள் கைக்கொள் இலாபத்தின் ஆரம்ப மீதியை புறக்கணித்திருந்ததுடன் அதனைச் செம்மையாக்கமும் செய்யவில்லை.

(5) சில பரீட்சார்த்திகள் செலவுகளை வகைப்படுத்தல் தொடர்பில் விளக்கத்தினைக் கொண்டிருக்க வில்லை என்பதுடன் அவர்கள் அறவிடமுடியாக்கடனை நிதிக் கிரயம் ஒன்றாகக் கருதியிருக்கவு மில்லை.

(6) சில பரீட்சார்த்திகள் தனிச்சங்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி மற்றும் செலுத்தவேண்டிய வட்டி ஆகியவற்றின் அடிப்படையில் ஆண்டிற்கான மொத்த தனிச்ச வட்டி மற்றும் அட்டுறு தனிச்ச வட்டி ஆகியவற்றைச் சரியாக அடையாளம் காண்பதற்குத் தவறியிருந்தனர்.

(7) அட்டுறு மற்றும் முற்செலுத்தப்பட்ட செலவுகளுடன் தொடர்புடைய செம்மையாக்கங்களைச் செய்வதற்கான அடிப்படை விளக்கத்தினைக் கொண்டிருக்காத பரீட்சார்த்திகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(8) நிதிநிலைக் கூற்று மற்றும் வருமானக் கூற்று ஆகியவற்றின் சரியான இடங்களில் பதிவுகளை செய்வதற்கு பரீட்சார்த்திகள் கவனம் செலுத்துதல் வேண்டும். சரியான செய்முறைகளைச் செய்ததுடன் வருமானக் கூற்றில் தொகைகளை சரியானவாறு வெளிப்படுத்திய பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

(9) நேர முகாமையின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, என்ன கேட்கப்பட்டதோ அதற்கு மாத்திரம் விடையெழுதுவது அதிகளவு புள்ளிகளைப் பெற உதவும்.

**பொதுவான குறிப்புகள் :**

அடிப்படைக் கணக்கீட்டுக் கோட்பாடுகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள், பங்குடமைச் சட்டம் 1890 மற்றும் கம்பனிகள் சட்டம் ஆகியவை பற்றிய விளக்கத்தைப் பரீட்சார்த்திகள் கொண்டிருத்தல் வேண்டும். வினாக்களுக்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு பக்கத்திலும் வினா இலக்கங்களைச் சரியாக எழுதுதல் (பரீட்சார்த்திகளில் சிலர் பக்க இலக்கங்களை வினா இலக்கங்களாகக் குறிப்பிட்டிருந்தனர்), சம்பந்தப்பட்ட விடைகளுடன் அதன் செய்முறைகளையும் சமர்ப்பித்தல், வினா ஒன்றின் பகுதிகளுக்கான விடைகளை பல்வேறு பக்கங்களிலும் எழுதுவதைத் தவிர்த்தல், அவ்வாறு எழுதுவதாயின் உரிய தொடர்புகளை இடுதல் என்பன முக்கியமானவையாகும். விடைகளை எழுதும் சகல வேளைகளிலும் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்திசெய்வதில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தின் முழுமையான உள்ளடக்கத்தை ஆழமாகக் கற்று, ஒவ்வொரு அலகு அல்லது பிரிவிலும் எதிர்பார்க்கப்படும் அறிவு மட்டத்தில் நல்லதொரு புரிந்துணர்வுடன் ஒவ்வொரு அலகு அல்லது பிரிவினதும் அறிவினை மேம்படுத்திக்கொள்ளவும்.

**(2)** வினாவைப் பல தடவைகள் வாசித்து, சகல கணிப்பீடுகளுக்குமான செய்முறைகளைத் தெளிவாகக் காட்டுக.

**(3)** ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்படின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.

**(4)** தெளிவான கையெழுத்தில் எழுதுவதுடன் விடைகளின் இலக்கங்களையும் சரியாக எழுதவும். விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன் வினா இலக்கங்களை மீளவும் பரிசீலிப்பது கட்டாயமானதாகும்.

**(5)** வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும்.

**(6)** கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விடைகளில் பயிற்சி பெறுவதானது விளங்கிக்கொள்ளும் தன்மை, திறன்கள் மற்றும் அனுபவத்தை மேம்படுத்திக்கொள்வதற்கு உதவியாக அமையும். ஒரே அமைப்பைக் கொண்ட விடயங்கள் திரும்பவும் பரிசீலிக்கப்பட முடியும். எனவே இது சகல நேரங்களிலும் நன்மையானதாக அமையும்.

**(7)** இப்பாடத்துடன் சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமங்கள், பாடப்புத்தகம் மற்றும் சஞ்சிகைகள் ஆகியவற்றையும் அதேபோன்று பாடம் சம்பந்தமான வேறு விடயங்களையும் கற்றுக் கொள்ளவும்.

**(8)** நேர முகாமை மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு வினாவுக்கும் செலவழிக்கப்பட வேண்டிய நேரத்தை புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ள விதத்தைப் பார்த்து தீர்மானித்துக்கொள்ள முடியும்.

**(9)** நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சையில் சித்தியடையும் இயலளவு உச்ச நம்பிக்கையுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * * -